**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழு**

**கல்வி அமைச்சு**

வெற்றிடங்கள் நிலவும் கல்வி அமைச்சின் பிரதான ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) பதவி தொடர்பாக அரசாங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் அனுமதியின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் I ஆம் தரத்தில் 5 வருடங்களுக்கு குறைவான திருப்திகரமான சேவைக்காலத்துடன் தகைமையுடைய உத்தியோகத்தர்களிடம் இருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. தெரிவு செய்யும் முறைமை**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் அங்கீகரிக்கப்படும் மதிப்பெண் நடைமுறையின் படி, அந்தக் குழுவினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகத்தேர்வுச் சபையின் ஊடாக நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வொன்றின் பரிந்துரைக்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் நியமிக்கப்படும்.

**2. விண்ணப்பப்படிவங்களை முன்னிலைப்படுத்தும் விதம்**

இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை முறையாக பூர்த்திசெய்து **2023.07.15** ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும்படி "உதவிச் செயலாளர், கல்விச் சேவைகள் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதான ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) பதவிக்காக விண்ணப்பித்தல்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவிற்கமைவாக,

**எம்.என். ரணசிங்க**
செயலாளர்
கல்வி அமைச்சு

2023.06. 27



Scanned with MOBILE SCANNER